## திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை - மருத்துவர்.மு.பிரியதர்ஷினி, பி.டி.எஸ்.,

ந.க.எண்.அ2/20498/2018

நாள்:12.05.2022

பொருள் : நியமனம் (நேரடி) - சார்நிலை - பணித்தேர்வு 2014-2015 & 2015-2016 உடன் இணைந்த தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி - திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகு — தண்டராம்பட்டு வட்டம் - வட்டாட்சியர் அலுவலகம் - முதுநிலை வருவாய் ஆய்வாளர் - திரு.தா.வரதராஜீலு என்பவரை நேரடி நியமன உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது - உதவியாளர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தியும் தகுதிகாண் பருவம் தொடங்கியும் - உத்திரவிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை :

1. சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடிதம் எண். 2440/OTD-B1/2014, நாள்-04.06.2018.
2. மாவட்ட வருவாய் அலுவலர், திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் எண். அ2/20498/2018, நாள் 06.07.2018.
3. தமிழ்நாடு மாநில நிலை கூராய்வுக்குழு-II, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை அவர்களின் செயல்முறைகள் எண்.11803/CV-2(2)/2019-7, நாள்-10.03.2022

-------

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் சார்நிலை பணித் தேர்வு- 2014-2015 & 2015-2016 உடன் இணைந்த தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதிக்கு உதவியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில், இம்மாவட்ட வருவாய் அலகில் பார்வை 2-ல் காணும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைக்ளின்படி பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் கீழ்க்கண்ட நேரடி நியமன உதவியாளர் திரு.தா.வரதராஜீலு, வட்டாட்சியர் அலுவலகம், தண்டராம்பட்டு வட்டம், என்பவருக்கு திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலரால் வழங்கப்பட்ட இந்து - இருளர் சாதிச் சான்றின் மெய்த்தன்மை உறுதி செய்யப்பட்டதாக பார்வை 3-ல் காணும் செயல்முறைகளில் ஆணையிடப்பட்டதன் அடிப்படையில் தனியருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதியில் உதவியாளர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தியும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணித்தொகுதி விதிகளின் விதி 23(அ)-ன்படி தகுதிகாண் பருவம் தொடங்கியும் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | உதவியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்பட வேண்டிய நாள் | தகுதிகாண் பருவம் துவங்கும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.தா.வரதராஜீலு, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், தண்டராம்பட்டு வட்டம். | 11.07.2018 மு.ப. | 11.07.2018 மு.ப. | 11.07.2018 மு.ப. |

மேலும் பார்வை- 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் இந்த பணி நியமனம் கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

The selection of the candidates is purely provisional subject to the final outcome of the Writ Petition if any pending on the files of the Honourable High Court of Madras / Madurai Bench of Madras High Court.

2. மேற்படி தனியர் தொடர்ந்து பணியில் சேர்ந்த மூன்று ஆண்டு காலத்திற்குள் 2 ஆண்டுகள் அவரது தகுதிகாண் பருவ காலத்தில் கீழ்க்குறிப்பிட்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற்று தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. இந்நேர்வு தொடர்பாக தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

1. வருவாய்த்துறை தேர்வு பாகம் - 1
2. வருவாய்த்துறை தேர்வு பாகம் - 2
3. வருவாய்த்துறை தேர்வு பாகம் - 3
4. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு

ஓம்/-மு.பிரியதர்ஷினி,
மாவட்ட வருவாய் அலுவலர்
திருவண்ணாமலை.

//உத்திரவுப்படி//

16/5/22

மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)
திருவண்ணாமலை.

<u>பெறுநர்-</u>

திரு.தா.வரதராஜீலு,
முதுநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தண்டராம்பட்டு வட்டம்.
— உரிய அலுவலர் மூலமாக

12/5/22

<u>நகல்-</u>

1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண்,03, தேர்வாணையம் சாலை, சென்னை-03.
2) அரசு கூடுதல் தலைமைச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-600 009.
3) வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை.
4) வட்டாட்சியர், தண்டராம்பட்டு.